மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு கே, ஆர், ராஜு.

திரு கே, ஆர், ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நீலகிரி மாவட்டம் சின்கோனாவிலிருந்து தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு மாற்றப்பட்ட காலி நிலங்களில் தேயிலை பயிரிட்டால் மாவட்ட மக்களுக்கு நிரந்தர வேலை கிட்டும் இத்திட்டத்தினைச் செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, கே, ஏ, செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. உறுப்பினர்கள் குறிப்பிட்ட இடத்தை—சின்கோனா இருந்த இடத்திலே இருக்கின்ற அத்தனை நிலங்களையும் தேயிலைத் தோட்டங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கையை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி பியாட்ரிக்ஸ் டிசௌசா.

Dr. THIRUMATHI BEATRIX D'SOUZA: Honourable Speaker Sir, I would like to know whether under Tamil Repatriales the Srilankan refugees have benefitted.

மாண்புமிகு திரு, கே, ஏ, செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. இலங்கைத் தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 266, திரு, சி, ஞானசேகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்,

266—

நெசவுத் தொழிலாளர்களுக்குத் தொகுப்பு வீடுகள்.

*429ஏ திரு, சி, ஞானசேகரன் :
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேலூர் தொகுதியில் நெசவுத் தொழிலாளர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு, இ, மதுசூதனன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள இரண்டு கைத்தறி நெசவாளர் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு உகந்த நிலம் கிடைக்கப் பெறாததால், இத்திட்டம் செயல்படுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடையில்லாத மனிதன் அரை மனிதன் என்பார்கள். இங்கு ஆடையைத் தந்து மானம் காத்துக் கொண்டிருக்கின்ற நெசவாளர்கள் என்னுடைய தொகுதியிலே சத்துவாச் சேரி என்ற பகுதியிலே நிறையபேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மனிதர்களுக்கு—இப்பொழுது வீட்டு வசதி வாரியம் மூலமாக பேஸ் 4 என்றும் பேஸ் 5 என்றும் நிலங்களை எடுக்க அரசிடம் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் வாயிலாக, தறிக் கூடங்கள் இணைந்த வீடுகள் 2 ஆயிரம் கட்டிக் கொடுப்பதாக, 113-வது பாராவிலே, நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இந்த இடத்திலே, நெசவாளர் குடும்பங்களுக்கு வீடுகளைக் கட்டித் தருமா என்பதை அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—00

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள், வீடு தேவைப்படும் உறுப்பினர்கள், தங்கள் சொந்த நிதியின் மூலமாக வீடு கட்டுவதற்கு உரிய நிலத்தை ஒட்டு மொத்தமாக விலைக்குப் பெற்று அதனை சங்கத்தின் பொறுப்பில் பதிவு செய்து கொடுப்பார்களேயானால், 'ஹட்கோ' மூலமாகக் கடன் ரூ. 14 ஆயிரமும், மத்திய அரசின் மானியமாக ரூ. 5 ஆயிரமும், மாநில அரசின் மானியமாக ரூ. 5 ஆயிரமும் பெற்று, அதைக் கொண்டு வீடுகள் கட்டுகிற திட்டம் இருக்கிறது. தற்போது, சத்துவாச்சாரியில் இரண்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களினுடைய நிதிநிலை சரிவர இல்லாத காரணத்தினால், இது இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டிலே, ஒரு லட்சத்து பத்தாயிரம் வீடுகள் கட்டித் தரப்படும்; குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற கொள்கையை இந்த அரசு நிறைவேற்றும் என்று 138—வது பாராவிலே, நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே, வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக கட்டித் தரப்படுகிற வீடுகளில், நெசவாளர்களுக்கு முன்னுரிமையளித்து, அவர்களுக்கும் வீடுகள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கேள்வி, கைத்தறித் துறை அமைச்சருக்கு வராது. வீட்டு வசதித் துறை அமைச்சரிடத்திலே இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும். இப்படிக் கட்டுகிற வீடுகளில் நெசவாளர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று கேட்கிற கேள்வி நீங்கள் கேட்பது. ஆனால் அவருடைய துறையிலேயிருந்து கட்டப்படுகிற வீடுகளுக்குத்தான் அவர் பதில் சொல்ல முடியும். அதனால், இதற்குத் தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு) இல்லை; இல்லை. நீங்கள் கேட்கிற கேள்வி, வீட்டுவசதி வாரியத்தினால் கட்டப்படுகிற வீடுகள் இந்த நெசவாளர்களுக்கு ஒதுக்கப்படுமா என்று கேட்கிறீர்கள். அதற்குக் கைத்தறித் துறை அமைச்சர் எப்படி பதில் சொல்ல முடியும்? இந்தக் கேள்வி, இதிலே துணைக் கேள்வியாக வராது. (குறுக்கீடு) அதற்குத் தனிக் கேள்வி போடவும். தனிக் கேள்வி போட்டீர்களானால், அதற்கு வீட்டு வசதித்துறை அமைச்சர் பதில் சொல்வார்.

வினா எண் 267; திரு. செ. ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

267—

பாலம் அமைத்தல்.

* 3755 திரு. செ. ஆறுமுகம்:
மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வானூர் தொகுதியில், வானூர் வட்டத்தில் திருவக்கரைக்கும் புதுவை மாநிலம் திருக்கனூருக்கும் இடையில் உள்ள ஆற்றில் ஒரு நீண்ட பாலம் அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
தற்போது திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்கிரமக்காரர்களின் ஆணிவேரை அடியோடு களைந்து கொண்டிருக்கிற எங்கள் காவல் தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், வானூர் வட்டம், எனது வானூர் தனித் தொகுதியில், மிக மிகச் சக்திவாய்ந்த அருள்மிகு வக்கரகாளியம்மன் ஆலயத்தைக் கொண்ட, திருவக்கரை என்ற உலகப் புகழ் பெற்ற ஒரு கிராமம் உள்ளது. அதன் வழியாகத்தான், சுமார் 30 கிராமங்கள் கொண்ட கிராம மக்கள் புதுவை மாநிலத்திற்குச் செல்லவும், புதுவை மாநிலத்திலிருந்து பல லட்சக்கணக்கான மக்கள் திருவக்